7th September 1960]

SRI A. GOVINDASAMY : அகில இந்தியாவுக்கும் சமுதாய நலத் திட்டத்தை நல்ல முறையில் பரிசீலனை செய்வதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் முசௌரியில் ஒரு நிலையம் இருப்பது போல சென்னை ராஜ்யத்திலே ஒன்றை ஏற்படுத்த நமது அரசாங்கம் உத்தேசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது செமினாரைப் பொறுத்தது.

Blocks (Delimitation)

* 526 *Q.*—SRI S. NAGARAJA MONIGAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any representations were made to the Government that the existing system of delimitation of blocks on the basis of population only is causing hardship to people of the thinly populated regions and that delimitation should be remodified on the basis of area also; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No such representation has been received. The assumption, however, that blocks are delimited on the basis solely of population strength is not correct.

(*b*) Does not arise.

SRI S. NAGARAJA MONIGAR : தற்போது எங்களுக்குக் கொடுத்துள்ள பட்டியலில் சேலம் ஜில்லாவில் பதினேழு ப்ளாக்குகள் என்றால் அதிக பரப்பளவுக்கு ஒரு ப்ளாக் என்று அமைக்கப்பட்டிருக்கிறது. அறுபதினாயிரம் ஜனத்தொகைக்கு ஒரு ப்ளாக் என்றால் அதையும்விட அதிகமான ஜனத்தொகை உள்ள பகுதியும்கூட ஒரு ப்ளாக்காக அமைத்து இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஒரு ப்ளாக்குக்கு 17 லட்சம் ரூபாய் செலவிடுவது என்கிறபோது அதிக ஜனத்தொகை உள்ள இடத்திலும் இது தான் செலவழிக்கப்படுகிறது. ஆகவே இதை ஆராய்ந்து விஸ்தீர்ணம், ஜனத்தொகை இந்த அடிப்படையில் ப்ளாக்குகளை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது வெறும் ஜனத்தொகை மட்டும் அல்ல, பிற்போக்கான நிலைமை, பரப்பளவு ஆகிய எல்லாவற்றையும் மனதில் கொண்டுதான் இந்த ப்ளாக்குகள் பிரிக்கப்படுகின்றன. அப்படித்தான் நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறது. இனிமேல் அதைப் பரிசீலனை செய்து மாற்றுவது என்பது முடியாத காரியம். ஏதேனும் தனிப்பட்ட இடத்தில் கஷ்டம் இருந்தால் அதை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதைப் பரிசீலனை செய்யலாம்.